
கார்த்திகை - மார்கழி 2022

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் -06 எழுத்து -33




தடைகளைத் தகர்த்து

தகவுகளைத் தேடி

இருமாத கவிதை இதழ்

NEENKALUM EZHUTHALAM
(Poetry Magazine)

விலை 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் – 33

நவம்பர் - டிசம்பர் 2022

## ஆசிரியர்

## எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

## படைப்பாளிகள்


எஸ்.சத்தியதேவன்
பெ.பத்மப்பிரஷன்
தெ.கரிதரன்
பீ.ரீ.அஸீஸ்
ர.சசிகலா
அஸ்வினி வையந்தி
ந.பார்த்தீபன்
வசந்த தீபன்
க.யோகானந்தன்
சூசைஎட்வேட்
தம்பிலுவில் ஜெகா
அஷ்ரபாநூர்தீன்
அ.கௌரிதாசன்
தி.லலிதகோபன்
ஜெயமதி
ஜெ.ஜெரினா
ஜெஸீமா ஹமீட்
அருணா லெட்சுமணன்
மல்லிகைவாணன்
ந.நித்தியா
எஸ்.ஆர்.தனபாலசிங்கம்
மூலமும் பெயர்ப்பும் : சி.சிவசேகரம்
சி.வி.வேலுப்பிள்ளை தழுவல் சக்தீ - பாலஜயா
நூல் அறிமுகம்
பதிவுகள்
அஞ்சலிக் குறிப்புகள்
நூல் அறிமுகம்
வாழ்த்து - இரா.அ.இராமன்
கட்டுரை - இக்பால் அலி
எம்.ஏ.நுஃமான் கவிதை


வடிவமைப்பு - ரோ.சுதர்ஷினி (Google Digital)

தொடர்புகளுக்கு,
ஆசிரியர்,
நீங்களும் எழுதலாம்
43/4, சணல் லேன்,
திருகோணமலை.
e.mail : n.ezhuthalam18@gmail.com
0778812912



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
0
0
7

# கவிஞனும் அறம் பாடுதலும்

மார்ச் - ஏப்ரல்

“அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்” என்கிறது சிலப்பதிகாரம்.

பாண்டிய மன்னன் தான் தவறிழைத்ததை அறிந்தபோது “யானோ அரசன் யானே கள்வன்” என்றுரைத்து உயிர் நீத்தான்.

ஆரம்ப காலங்களில் மொழியறிவு படைத்த புலவர்களே அறிவாளிகளாகவும், மன்னர்களுக்கும் மக்களுக்கும் வழி காட்டிகளாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்களின் வாக்குகள் பலிக்கக்கூடிய மந்திரசக்தி கொண்டவை என்பது மக்களின் நம்பிக்கை.

இவ்விடத்தில் கவிஞனின் சக்தியை விளக்கும் வீரபாண்டிய கட்டபொம்மன் திரைப்படத்தில் வரும் வசனமொன்றை நினைவிற் கொள்ளலாம். “என் தமிழ்ப்புலவன் கேட்டிருக்க வேண்டும் அறம் பாடியே உன்னை அழித்திருப்பான்”

நம் நாட்டில் இன்றிருப்பதோ அறம் தவறிய அரசியந்திரம், அரசாட்சி. இவற்றின் அங்கமானவர்கள் பொருளாதாரக் குற்ற வாளிகள். கடந்த ஒரு நூற்றாண்டிற்குள் தங்களை வங்குரோத்தென அறிவித்த அற்பத்தனமான சொற்பநாடுகளோடு ஏழாவதாக நாட்டை இணைத்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறான பொருளாதாரக் கொள்கையினால் ரூபாவின் பெறுமதி நாளுக்கு நாள் வீழ்ச்சியடையும் அதேவேளை விலைக்கட்டுப்பாடு நீக்கப்பட்டமையால் திடீர் விலை யேற்றங்கள். இவற்றின் காரணகர்த்தர்கள் முன்னர்வந்த, பின்னர்வந்த ஆட்சியாளர்கள் என பந்தை மாறி மாறி மறுபக்கம் தள்ளும் வேடிக்கை ஒரு புறமாக, **நாட்டை விட்டகல்தல்கள் இன்னோர்** புறமாய்.

உண்மையில் இவர்களுக் கிடையிலான பதற்றங்களும் பரஸ்பர குற்றச்சாட்டுக்களும் 'அரகலய' எழுச்சியால் ஏற்பட்டவையே.

தங்களுக்குள் எவ்வளவுதான் முரண்பாடுகள் இருந்தாலும் இந்த ஆட்சியதிகாரத்தையும் முறைமையையும் பாதுகாப்பதில் அவர்களுக்கு இருக்கும் அக்கறை கண்கூடு.

இத்தகைய அநியாயங்களுக்கும், அநியாயக்காரர்களுக்கும் எதிராகக் குரல் கொடுக்க வேண்டியதோடு சரியானதும் நியாயபூர்வமானதுமான கருத்துக்களை வெகுஜனங்களிடம் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு படைப்பாளி களுக்குண்டு.

'தடைகளைத் தகர்த்து
தகவுகைளத் தேடி'

நீங்களும் எழுதலாம்
அன்புடன் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலை மறுப்பு

பிய்த்துத் தின்று செரித்து
ஊளையிடும்
நரிகளென
ஊற்றெடுக்கும் உணர்வுகள்
ஒவ்வொரு கணத்தையும்
குதறுகின்றன

வாழ்வின் இருப்புக்கான
ஏழ்மையின் வலியில் காலூன்றி
சுயநலத்தின் நியாயத்தில்
இருப்பழிந்து போகிறது

நம்பகத்தன்மையை துறந்த
இரவுகளில்
வறுமைக்கும் வெறுமைக்கும்
அதன் ஒவ்வொரு குரலும் வழிந்தோடி
வெளிகளின் தளத்தில் ஒவ்வொரு
புள்ளியிலும்
அசைவுகள் உள்ளொடுங்கியதாய்
நிலை மறுக்கும் வாழ்வு

எஸ்.சத்யதேவன்

---

**படைப்புக்களில் வரும் கருத்துக்களுக்கு**
**படைப்பாளிகளே பொறுப்பாளிகள்.**
**படைப்பை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு**
**உரிமை உண்டு.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் பதில் சொல்லும்

உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே
புறநானூற்றுப் புலவர்கள்
புகழ்பாடி மன்னரை
ஆற்றுப்படுத்தினர்

அற்றார் அழி பசி தீர்த்தல்
பெற்றான் பொருள் வைப்புழி
பெருநாவலர் வாக்கு

அறவோர்களிக்கவும்
அந்தணரை ஓம்பவும்
வறியோரைத்தேடி
வாஞ்சையுடன் செல்வதை
சிலப்பதிகாரத்தில்
சிறப்புடன் கற்றோம்

பசிப்பிணி தீர்த்தல்
பலகோடி அறமென
படித்தோம் மணிமேகலையில்

குடைபோல் நிழல் கொடுத்து
குடிகளைக்காப்பான் கோமகன்
பசுக்கன்றுக்காய்
பாசமிகு மகனைப் பறிகொடுத்த
மனுநீதிச் சோழனை அறிவோம்

நாட்களை நகர்த்த முடியாது
நாளாந்தம் போராடி
வீதியிலே மரணிப்போரை
கண்ணுற்றும் இன்னும்
கண்மூடி இருப்பவர்க்கு
காலம் பதில் சொல்லும்

கம்பிலுவில் "ஜெகா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் சமைத்த பாதை

காரிருள் போர்வையை
ஊர் போர்த்திக் கொள்ள
விளக்கொன்றின் சுடர்
அதை கிழித்து
காகிதத்தில் படிகிறது

கண்களிரண்டும்
காகிதத்து எழுத்திற்கும்
மனத்திற்கும்
பாலமாகி
சேவை செய்ய
எழுத்தின் கருத்து
மனமெங்கும் ஊர்ந்து
தழுவி அணைத்து
ஆலிங்கனம் செய்கிறது

சூழலில் படந்துள்ள இருள்
பிறந்தனைத்தையும் மறைத்து
எழுதியவனின்
மனதினுள் நான் நுழைய
ஓர் அதிவேகப் பாதையை
சமைக்கிறது

நீண்ட நாட்களின் பின்
அமைதியும் ஆழமும்
கொண்டமைந்த
இவ்வாறானதொரு பயணம்

இருளுக்கு நன்றி

-பெ.பத்மபிரஷன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்யும் பொய்யும்

தொண்டைக் குழிக்குள்
சிக்கிய வார்த்தைகள்
கக்கவும் முடியாது நெஞ்சுக்குள்
மறுபடி பொத்தி வைத்திடவும்
முடியாது
அரித்து அரித்து .........
பெருஞ்சுமை இது.

பொறுத்திருக்க மாட்டாது
முந்திக்கொண்ட வாயை
செருப்பால் அடிப்பதும் தகும்.
அதன் எதிரொலியாய்
பகை மட்டும்தான் எஞ்சியது.

சிக்கிக்கொண்டவை
வார்த்தைகள் மட்டுமில்லை
உண்மைகள்.
அதை உரியவர் அறிய
ஆர்வம் தவிர்த்தல்
உறவுக்கு நலம்.

மேலோட்டமான ஒரு வாழ்வை
வாழ்ந்து தீர்ப்பதன் கொடுமையை
எந்த மனிதனிடம்
சொல்லி ஆறுதல் பெற?
அவனும் என்னைப்போல
உண்மைகளை
விழுங்கியவனாய் இருக்கலாம்.

-அஷ்ரபா நூர்தீன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை விழித்தெழச் செய்வோம்

அற்புத தீவாம் அன்னை நாட்டை
ஆருயிர் உறவாய் அணைத்துக் கொள்வோம்
அழிப்போம் கோபம் வெறுப்போம் குரோதம்
அனைத்து மக்களும் ஓரினம் என்போம்

அடக்கு முறையை அறத்தால் வெல்வோம்
அன்பின் இணைப்பால் ஒரு விதி படைப்போம்
அரசியல் வேஷத்தை அகற்றும் கோசமாய்
அமைதியின் வழியில் போராட்டம் காண்போம்

அயலான் என்று ஒதுக்கியே வாழ்ந்தோம்
ஆட்சியில் வந்தவர் பிரித்தே பார்த்தார்
அநியாய விலையும் அளவில்லா வரிசையும்
அல்லலும் அவதியும் அவரால் விளைந்ததே

அற்பமாய் போனது அடிப்படைத் தேவை
அந்தோ பாவம் மக்களின் நிலையது
அனுதினம் ஏறுது நாட்டின் வறுமை
அதனை நிறுத்த கோர்ப்போம் கைகளை

அழகிய தேசத்தை மீட்டிட விரைவோம்
அசுத்தப் பேய்களின் அடையாளம்
தொலைப்போம்
அலையும் மனங்களில் நம்பிக்கை
விதைப்போம்
அரணாய் காத்திட விழித்தெழு தோழா!....

தெ.கரிதரன் (சம்பூர் சமரன்)


கவிதைக்கான
பயில்களம்
பரிசோதனைக் களம்
காத்திரத்தின் களம்
கருத்தாடற் களம்
விளக்கக் களம்
விமர்சனக் களம்
} நீங்களும் எழுதலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைக்குரிய தலைவன்

ஊரைச் சுருட்டி வாழ்ந்தா யெனினும்
உந்தன் கையில் காசு இருந்தால்
ஊரே கூடும்; மாலைகள் சூடும்
உத்தமனென்று வாழ்த்திப் பாடும்!

ஆயபல் கலைகள் கற்றிருந்தாலும்
ஆமுயர் பதவி பெற்றிருந்தாலும்,
மாயஇவ் வுலகில் பணந்தா னின்றேல்
மனிதன் நீயென மறந்தே போகும்!

சத்தியம் தன்னை நீமறந்தாலும்
சாராயத்தைத் தான்குடித்தாலும்,
மித்திரர் பலரும் இல்லம் வருவார்
மேலவன் என்று விருதுகள் தருவார்!

கன்னியர் பலரை நீகெடுத் திடினும்
களவு, பொய்யைக் கைக்கொண்டாலும்
உன்னிடம் பணத்தாள் உண்டே யென்றால்
ஊரினில் நீதான் உயர் அதி காரி!

வட்டி வாங்கியே வாழ்ந்தா யெனினும்
வாட்டிப் பலரை வதைத்தா யெனினும்
பெட்டி நிறையப் பொன்பொரு ளிருந்தால்
"பெருமைக்குரிய தலைவன்" நீதான்!

அ.கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானிலம் சீர்கெட்டுப் போனால்

வஞ்சனை செய்து
வசைபாடும் மகிழ்வு
மிஞ்சுகின்ற காலம்
மிகைத்துப் போகும் கோலம்

நெஞ்சினில் நேர்மைக்கு
இடமின்றிப் போகும்
நஞ்சுப் பகைகள்
நானிலத்தில் பரவும்
நயவஞ்சக முகமலரும்.

கொஞ்சமும் அஞ்சாது மனது
கொடுமைகள் செய்ய
கிஞ்சித்தும் இரக்கம் இல்லாமலாகும்
தீதுகள் புரிவோர் அதில்
திண்ணமாய் தலை நிமிர்வர்.

கொஞ்சும் குழவிக்கும்
அன்பு புரிவோர்
அற்றுப் போவார் நாளடைவில்
மிஞ்சும் நேயமும்
மிகைத்துப் போகாது உலகை.

வார்த்தை ஆயுதங்கள்
வலிமை கொள்ளும்
வாகை சூடி
வாழ்ந்திட நினைக்கும்
வன்பு புரிவோர் உள்ளம்.

நம்பிக்கை துரோகங்கள்
மலிவாக நடக்கும்
நம்புதல் என்பது
இல்லாதொழியும்
நாளும் பொழுதும்
நல்லவை குறையும்

மானுட வாழ்வியல்
தடம் புரண்டு போகும்
தாமே பெரிதென்ற
நினைப்புகள் தோன்றும் இந்த
நானிலம் சீர்கெட்டுப் போனால்.

பீ.ரீ.அஸீஸ், கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.லலிதகோபன் கவிதைகள்

## I

யாரும் அஞ்சலிக்காத
ஒரு கல்லறையை தேர்கிறேன்
வாடியபடியே கிடக்கின்றன பூக்கள்
யாரையோ தேடியபடியே
அலைகின்றன
தோத்திரத்தின் சொற்கள்
இந்த அந்தரிப்பினுள்ளும் எப்படியோ
நுழைந்து விடுகிறாய்
பண்ட மாற்றம் போல
உன்னை புதைத்துவிட்டு
என்னை உயிர்ப்பிக்கிறேன்
தூரத்தே இரு மலைகள்
ஒன்றின் மீது மற்றொன்று கவிந்தபடி
ஆனாலும் அது ஒரு மலை
முற்றும் இரு மலைகள்.

## II

முடிக்கவே முடியாத
புத்தகமொன்றுள்
மூழ்கியிருக்கிறேன்
கண்களுக்கும்
எழுத்துகட்கும் கடும் போட்டி
யாரை யார் முந்துவதென
இரவும் மின்தடையும்
சங்கமிக்கும் தருணத்தில்
புத்தகத்தை மூடுகிறேன்
எழுத்துக்கள் மின்மினியாகி
அறையை வனப்பூட்டுகின்றன
அவளை மின்மினியாக்கிய
எனது கற்பனையை
துரத்துகின்றன
விழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணையாக

இருள் கவ்விய
மேகம்
இதமாய் சிந்திய
துளிகள் சாரலாய்
சலசலக்கும்
மரக்கிளைகளுக்குள்
காற்றின் சல்லாபம்....!

நேரும் மறையும்
மோதுண்டதில்
பளிச்சிட்ட மின்னல் கீற்று
அண்டவெளியை பிளக்கும்
ஆங்கோர் சத்தம்
பேரிடியாய்....!

கைகளால்
காதுகளை மூடி
"அர்ச்சனை"
என்றொலித்த உதடுகள்
தரைக்கும் உடலுக்கும்
துண்டிப்பை நல்கிய
நாற்காலி....!

சங்கிலித் தொடராய்
சங்கமிக்கும்
எண்ணவோட்டங்கள்
ஜன்னல் திரை விலகிய
வெளிக்காட்சிகள்
இன்னலையும் இதமாய்
கடந்திடும் சிறு புன்னகை...!

விழிகளில் ததும்பும்
நீர் துடைக்க
விரல்களை தவிர
யாருமில்லையென
தடவைகள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தும்
பரவாயில்லையென மனம்
ஏங்கும்....!

குறைவில்லாமல்
கொட்டிக்கிடக்கும்
எத்தனையோ உறவுகள்
வண்ணமயமாய் வாழ்வை
அலங்கரிக்க....!
தேவைக்கு மட்டும்
எதுவும் பயன்படாமல்...
வழித்துணையாய்
வெறுமையும் தனிமையும்....!

திருமதி. ர. சசிகலா
வரோதயநகர்

## தாமதம் எதற்காக?

வானவில்லின் வர்ண அழகை
ஒன்றாய் சேர்த்தாற்போல
இனிமையான உணர்வுகளும்
சுவையான மனநிறைவும் போல
வார்த்தை கூட
சில சமயம்
வாயடைத்துப் போய் நிற்கும்
என் தனிமையின் கேள்விகளுக்கு
எல்லாம்
விடையாக வந்து
உன் பார்வைக்காகவே
பரிதவிக்கச் செய்து
பின்னும் என்ன தாமதம்?

ஜெயமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துக்களை ஆதரிப்பவள்

எனக்கும்
என் எழுத்துக்கும்
தொடர்பே இல்லை....!
சிலமுறை
மன்னித்துக்கொள்ளுங்கள்
பலமுறை அது
பொய்யாகவே
இருக்கும்....!

சிலவற்றை
விரும்பாவிட்டாலும்
என் எழுத்துக்கள்
அவற்றை
ஆதரிக்கின்றன....!

அவை மீண்டும் மீண்டும்
என்னை
தொல்லைப்படுத்துகின்றன...!

ஏதாவது எழுதிக் கொண்டிரு
என்று தூக்கத்திலும்
என்னை எழுப்பி விடுகின்றன
இப்போது எழுப்பியதைப் போல்....!

கற்பனை அல்லவா
எப்போது வரும்
இன்ன நேரத்தில் வரும்
என்று சொல்ல முடியாதல்லவா...!

என் எழுத்துக்கள்
இவ்வளவு தொந்தரவு
தந்தாலும்
நான் அவற்றை
நேசிக்கின்றேன்
உண்மையில்
நான் அவற்றை நேசிக்கின்றேன்...!

என்னை மீறிய
பொய்ப்பேச்சுக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் எழுத்துக்கள்
உரக்கச் சொன்னாலும்
நான் அவற்றை நேசிக்கின்றேன்
நேசிக்கிறேன் என்றா சொன்னேன்
இல்லை இல்லை
கொண்டாடித் தீர்க்கின்றேன்
என்று வைத்துக்கொள்ளுங்கள்...!

அஷ்வினி வையந்தி

## இன்று நீ நாளை நான்!

கடைசிக் காலங்கள்
கவலைக்குரிய நாட்கள்
கண்ணீர்க் கோலங்கள்
கண்களுக்குப் புலப்படாத
வைரசின் தாக்கங்கள்
அதனால் எண்ணிக்கை இல்லாத
மரணங்கள்
மரணித்த உறவுகளின் உடல்களை
மனைகளில் வைத்திருக்க முடியாத
அபாயநிலை
அழுகைக்கும் அஞ்சலிக்கும்
ஒன்றிணைத்திட முடியாத
சட்டதிட்டங்கள்
ஆறுதலுக்கென்று உறவுகளை
அழைத்திட முடியாத அவலநிலை
கல்லறை இல்லாத நல்லடக்கங்கள்
கண் காணாத இடங்களில்
கொட்டப்படும் குப்பைகளைப் போல்
கொளுத்தி எரிக்கப்படும் மனித
எச்சங்கள்
இவைதான் வேகம் கொண்ட
நம் மானிட வாழ்வின் துயரநிலை
இதில் இன்று நீ நாளை நான்.

திருமதி.ஜெ.ஜெரீனா
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகள்

# பௌர்ணமி தின நிகழ்வு

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் பௌர்ணமி தின நிகழ்வு 11.08.200ல் தி/ உவர்மலை சமூகக்கற்கை நிலையத்தில் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 'நீங்களும் எழுதலாம் சிற்றிதழும் அதன் வகிபாகமும்' என்ற பொருளில் கவிஞர் தி.லலிதகோபன் உரையாற்றினார். 'இன்னுமென்ன தாமதம்?' என்னும் தலைப்பில் கவிஞர்.க.யோகானந்தன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்களான செ.ஞானராசா, ஜெ.மதிவதனி ஆகியோர் கவிபாடினர். அதனைத் தொடர்ந்து நாட்டின் சமகால நிலைமைகள் (அரகலய – காலிமுகத்திடல்) குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲

## அ.ச.பாய்வாவின்
## குழல்வாய் மொழி
## (இரு குறுங்காவியங்கள்)
## நூல் அறிமுக நிகழ்வு



05.12.2022
மேற்படி நிகழ்வு தி/உவர்மலை சமூகக் கற்கை வளநிலையத்தில் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் ஒ.குலேந்திரன் வைத்தியகலாநிதியும் ஆய்வாளருமான அ.ஸதீஸ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்புரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.அச்சுதன் ஆற்றினார்.

நூல்விமர்சன உரையை கவிஞர் க.யோகானந்தனும் நூல் வாசக நிலை அனுபவத்தை கவிஞர் தி.லலிதகோபனும் மேற்கொண்டனர். முதற்பிரதியை சட்டத்தரணி திருக்குமரநாதன் பெற்றுக்கொண்டார். ஏற்புரையினை நூலாசிரியர் அ.ச.பாய்வா ஆற்றினார்.

## கண்ணீர் அஞ்சலி

**சாகித்திய ரத்னா**

**கே.எஸ்.சிவகுமாரன்**

கடந்த ஆறு தசாப்தங்களாக தமிழிலும் ஆங்கிலத்திலும் திறனாய்வு, பத்தியெழுத்து, ஆக்க இலக்கியம் பத்திரிகை ஆசிரியர், நூலாசிரியர், மொழிபெயர்ப்பாளர் என பல்வேறு துறைகளிலும் இயங்கியவர்.

நீங்களும் எழுதலாம் இதழில் மூலமும் பெயர்ப்பும் பகுதிக்கு பங்களித்ததோடு இதழ் பற்றி தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளிலும் எழுதியவர்.

15.10.2022இல் இவ்வுலகை விட்டுப்பிரிந்த கே.எஸ்.சிவகுமாரனது இழப்பு ஈடுசெய்ய முடியாதது அன்னாருக்கு நீங்களும் எழுதலாமின் ஆழ்ந்த அஞ்சலிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாகித்ய ரத்னா தெளிவத்தை ஜோசப்

சிறுகதை, குறுநாவல், நாவல். ஆய்வு, தொலைக்காட்சி நாடகம், திரைப்பட வசனம் என விரிந்து செல்லும் பன்முக படைப்பாளி. சாகித்ய ரத்னா உட்பட பலவிருதுகளுக்குச் சொந்தக்காரர், மலையக மக்களின் வாழ்வியலை முழுமையாக வெளிக்கொணர்ந்தவர் என்ற பெருமைக்குரியவர். தனது 88வது வயதில் (21.10.2022) இயற்கை யெய்தினார். அன்னாருக்கு நீங்களும் எழுதலாமின் ஆழ்ந்த அஞ்சலிகள்.

## லெனின் மதிவானம்

மலையகம் கற்றனை சொந்த ஊராகக் கொண்ட லெனின் மதிவானம் ஆய்விலக்கியத்தை தனது துறையாக வரித்துக்கொண்டார். ஆசிரியராக விரிவுரையாளராக கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக விளங்கியவர்.

இடதுசாரித்துவ சிந்தனையில் பல ஆய்வுகளைச் செய்தவர். இவரது நூல்களில் 'பேராசிரியர் கைலாசபதி சமூகமாற்றத்துக்கான இயங்காற்றல்' குறிப்பிடத்தக்கதாகும். 51வது வயதில் (13.11.2022) காலமான அன்னாருக்கு நீங்களும் எழுதலாமின் ஆழ்ந்த அஞ்சலிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நாடேன் ஏழையானது?

இனங்களுக்கிடை மோதலை செய்து
ஆட்சிக்கு வந்தோர்
அந்நியர் போலே
பெற்றதாயின் தாலி அறுத்து
யுத்தம் செய்தனர்

அந்நிய நாடுகளில்
ஆயுதம் வாங்கினர்
அதிலும் எம்மவர்
கொமிஷன் பெற்று
சோரம் போயினர்
சொத்துக்கள் சேர்த்து
சுகத்தைத் தேடினர்.

வீதிகள் போட்டு
விற்றனர் நாட்டை
கடலை நிறைத்துக்
கட்டடம் கட்டினர்
கோபுரம் எழுப்பி
கொள்ளையடித்தனர்

தேர்தலை வியாபார விளையாட்டாக்கினர்
தேடி சொத்தின்
தேக்கத்தை வைத்து வாக்கு வாங்கினர்.
வாரிசு அரசியலை வாரோட்டமாக்கினர்.

மத்திய வங்கியில் தொடங்கிய களவு
சீனியில் . பருப்பில்,
மஞ்சளில், உள்ளியில்
மரணத்தை தடுக்கும்
மருந்திலும் கூட மாபியா செய்தனர்

தெரிவு செய்த மக்கள்
தெருவுக்கு வந்தனர்
மூஞ்சூறு விழுங்கிய
பாம்பென நின்றனர்
தறுதலைத் தலைமை
தண்டிக்கும் வழியை
தவறவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமின்னும்
இலஞ்சமும் ஊழலும்
எங்கள் நாடேன்
ஏழையாய் போனது?
என்பதொன்றும்
மூடுமந்திரமல்ல...
முட்டாள் தனத்தின்
மூர்க்க நிலையிது...

ந.பார்த்தீபன்
வவுனியா

## அம்மா

அம்மா என எழுதினேன்
எங்கிருந்தோ அலைகடல்
அழுதது....

கருணை என சொல்லியபடி
கண்ணை மூடினேன்
அம்மாவின் சேலை
முகத்தை வருடியது...

ஐந்து வருடங்கள் என்பது
நாட்கணக்கு
அம்மா என்பது
என் உயிர் கணக்கு....

மனம் நொடித்த போதெல்லாம்
மடி சாய்த்தாள்
கண்மூடி திறப்பதற்குள்
கனவாகி மறைந்தாள்....

தாயாகி சேயாகி
தலை கோதும் விரலாகி
நிழலாகி ஒளியாகி
நினைவுகளின் தடமாகினாள்...
அம்... மா....

மாத்தளை ஜெஸீமா ஹமீட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீராக இருக்கிறேன் ஆகையால்

நான் தண்ணீர், ஆகையால் என்னைக்
குற்றம் சொல்லாதே
நான் ஏன் பனிக்கட்டி ஆனேன் என்று
நான் நீராவி ஆனேன் என்று
அல்லது அப்போது நான் ஏன்
குளிராக
இருந்தேன்
மேலும் நான் இப்போது ஏன் சூடாக
ஆகி இருக்கிறேன்
அல்லது நான் ஏன் ஒவ்வொரு
பாத்திரத்தின் வடிவமாக
ஆகுகிறேன் என்று
இன்னும் நான் நன்றியறிவுள்ளவனாக
இருக்கிறேன் என்று மக்கள்
என்னைப் பற்றி கருத்து
உருவாவதற்கு முன்பு இதை
நினைவில் வைத்திருக்கிறேன்
நான் தண்ணீர் என்று
மற்றும் இந்த அறிவுரை தர
வேண்டியதில்லை
பாரம்பரிய நற்பண்புகளை தர்மத்தை
எவ்வளவு காலம் வரை
நிறைவேற்றி வாழ்வேன் என்று.

ஹிந்தியில் : விஷ்ணுநாகர்
தமிழில் : வசந்ததீபன்

அறிமுகக் குறிப்பில் உங்களது கவிதை தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நூற்றாண்டுத் துயரமும் இரு நூற்றாண்டுத் துயரமும்

மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு 2023ம் ஆண்டுடன் இருநூறு வருடங்கள் பூர்த்தியாகிறது. சி.வி.வேலுப்பிள்ளையின் தேயிலைத் தோட்டத்திலே (ஆங்கில மூலம்) கவிதைத் தொடரில் குறித்த ஒரு நூற் றாண்டுத் துயரம் இரு நூற்றாண்டுகள் கழித்தும் தொடர்கிறது.

Withered roses their days
Remembered in throns
Unchanged in each detail.
Days like other days –
So have the hundred years
Gone one by one
To the tom – tom's throb!

வாடிய ரோசா
மலரிதழ் போல
வாடியே அன்னார்
வாழ்க்கை கழிந்தது

கூடிய வழக்கக்
கொடுமைகள் யாவும்
கூர்முள் ளெனவே
குடி குடி தொடர்ந்தன.

ஓர் நூற்றாண்டு
உதயமும் மறைவும்
ஓங்குறு பேரிகை
ஒலிக்குமுறலிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவு மழிந்து
ஒன்றன் பின் ஒன்றென
உருண்டன, புரண்டன
ஒழிந்தன கண்டீர்.

தமிழாக்கம் (தழுவல்)
சக்தீ அ.பால-ஐயா

⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨

## தேசிய மரம்.....

இது எங்கள் தேசிய மரம்
தேசியத்தில் மலையகமாய்
நிமிர்ந்து, நிமிர்த்திய திருப்தியோடு
திரும்பித்தான் பார்க்க முடிகிறது.

சோபை இழந்த மலை மண்ணில்
தேசிய மரங்கள் - தன்
வீரியத்தை இழந்து தவிக்கிறது
எங்கள் தேசிய மரங்கள்
'தேயிலைதான்'

தேயிலை நிழலின் மாந்தர்களை
தேய விடச் செய்யும் - எண்ணம்
தேய்ந்தது முழ தேசமும்தான்

எங்கள் தேசிய மரங்களுக்கு
போதிய ஊட்டம் வழங்கவில்லை.
மரங்களுக்கு மட்டுமா?

வாதுகளை பதம் பார்த்த கவ்வாத்து
கத்திகளின் தயார்படுத்தல்கள்
அபூர்வம் தான் - இப்போது
எந்த தயார்படுத்தலும் தேவையில்லை.
உள்ளவரை மட்டும் தானே வெட்டுவது.
வெட்டுங்கள் இனியும்
வீழப்போவது....

அருணா லெட்சுமணன்
நாவலப்பிட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை மேகங்கள்

மாரிகாலத்து மேகங்கள்
வானத்தில் கூடுகட்டும்
மேகக் கூடுகள்
உடைந்து சிதறிப் போகும்.....

மழைமொக்குகள்
மண்தொட்டு
மணம் தரும்...

உறக்கம் கொண்ட விழித்திரை
கிழிந்து போய்
நீண்ட இரவும் கரைந்து
முடிந்து போகும்....

அழகு காட்டும்
மழைப் போர்வை...
ஏழ்மை மனிதத்தை
அப்படியே கிழித்துப் போட்டுவிடும்.

நனைந்த மனிதம்
சூடுதேடும்.....
விழிகள் விறைத்துப் போய்
விரல்கள் ஓட்டைக் கூரைகளை

அழுத விழிகளோடு
பொருத்திக் கொள்ளும்
மழை நீரைத் தடுப்பதற்காய்

க.யோகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரிக வலைக்குள் நாமும்

நாளுக்கு – நாள்
நாகரிகம் பின்னும் - வலைக்குள்
நாமும் அகப்பட கூடாதென...
நகர்ந்து நகர்ந்து – பின்னால்...
நலிந்து போனது – உண்மை

பதில்கள் இல்லாத கேள்விகளால் ...
என்னையே என் கண்கள்..
நம்ப மறுக்கிறது...

புத்தகங்களுக்கு – பதிலாக...
புத்தம் புது – கைபேசி...
எத்தனை வடிவங்களில்...
விதவிதமாய் ஆடைகளும்...
பட்டொளியில் பளபளக்கும் -
மேனிகள்...
இத்தனையும் கடந்து...

நாளுக்கு நாள்...
நடந்து நலிந்த பாதங்களுக்கும்
மிதிவண்டியின் மிதித்து
இளைத்துப்போன – கால்களுக்கும்
மகிழுந்துதான் கிடைத்தால்
மனமகிழ்ச்சி வருமன்றோ...!

பஞ்சு போன்ற பாதணியும்
மண்ணை மறந்த – ஒரு
மஞ்சத்துப் படுக்கையும்
அடுப்புதனில் - நெருப்புமூட்டி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகு அடுப்புதனை –
மறந்துவிட்டோம்...

ஏர் கொண்டு....
உழுத காளை மாடுகளை
வீட்டுக்கொரு பசுவை
மறந்து போனோம்

இயற்கையோடு ஒன்றித்து
இனிமையாய் - வாழ்ந்த
இனமொன்று - இன்று
வாழ்வியலை தொலைத்துவிட்டு...
நோயியலால் - நாளும்....
நொந்து கிடக்கிது...

நாகரிக வலைக்குள் - நாம்
பட்டதுயர் போதுமென்று...
விட்டகன்று வெளியேறி...
இனியேனும் இயற்கையோடு...
வரும் தலைமுறையை
வாழ வழி சமைப்போம்

மல்லிகைவாணன்
திருமலை

வங்கி மூலம் வருட சந்தா செலுத்த விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு 500/= செலுத்திப் பற்றுச் சீட்டினை அனுப்பி வைக்கவும்.

**R.Thanabalasingam**
**A/C No.106653402077**
**Sampath Bank**
**Trincomalee.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்

## அமுதவிழாக்காணும் இலக்கியச் செயற்பாட்டாளர் கண்டி மக்கள் கலைமணி இரா.அ.இராமன்



கண்டி மஹியவா என்னுமிடத்தில் 1960களில் தனது 18வது வயதில் மறுமலர்ச்சி என்ற பெயரில் மன்றம் ஒன்றை நிறுவி சமூக சீர்திருத்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார்.

1969இல் 'அம்மா' என்ற சிற்றிதழ் ஊடாக இலக்கியச் செயற்பாடுகளில் காலூன்றத் தொடங்கிய இரா.அ.இராமன் முற்போக்குக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். 1986இல் 'மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்' என்ற அமைப்பை நிறுவி இலக்கியம், அறிவியல், சமூகச் செயற்பாடுகள் என பணியை விரிவுபடுத்தினார்.

எழுத்தாளர் கலைஞர், கல்வியியலாளர், அரசியல் வாதிகள் என பல்வேறு தரப்பினரையும் நாடி செயற்பாடுகளை முன்னெடுப்பதில் வல்லவர்.

1918ல் கண்டியில் பேராசிரியர் துரை மனோகரன் தலைமையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இரா.சடகோபனின் 'இரத்த வரலாறு' நூல்வெளியீட்டு நிகழ்வுக்கு, என்னையும் ஒரு பேச்சாளராக அழைத்தமை அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்துபட்ட செயற்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இலக்கியச் செயற்பாடுகள் கடினமாகிவரும் ஒரு சூழ்நிலையில், மலையக இலக்கியத்திற்கு பங்காற்றிவரும் இவர் எண்பதாவது அகவையை பூர்த்தி செய்வதை முன்னிட்டு நீங்களும் எழுதலாம் தனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈

## தெருக்குரல்

பணம் காசை சம்பாதிக்க முற்படுவாரேயல்லாது
குணம் பெயரை சம்பாதிப்பவர் இல.

*********

நியாயப்படி வாழ்வாரைக் காண்பதரிது செய்ததை
நியாயப்படுத்தி வாழ்வாரே அநேகர்.

*********

நேர்மை உறுதி ஊக்கம் உழைப்புள்ளவர்
ஓர்மமாய் முன்னேறிச் செல்வர்.

*********

ஒவ்வொரு சாதியையும் வேற்றினமாகக் கருதும்
ஓரினத்தை இனமெனக் கொள்ளலாகா.

*********

சூசைஎட்வேட்


## நீங்களும் எழுதலாம்



கவிதையிதழ்
தொகுப்பு
(12 இதழ்கள்)

விலை ரூபா 900.00




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் அறிமுகம்**

# சம்பூர் சமரனின் புலரும் புதுவிடியல் (கவிதைநூல்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுச் சிறப்பு இளங்கலை மானிப்பட்டத்தை பெற்ற மூதூரைச் சேர்ந்த தெட்சணாமூர்த்தி கரிதரன் என்ற இயற்பெயர் கொண்ட சம்பூர் சமரனின் முதலாவது கவிதை நூல் இது.

"உயர்தரம் படிக்கும் காலங்களில் கவிதை எழுதத் தொடங்கி பல்கலைக் கழகம் சென்ற பின்னர் பாரதி, பாரதிதாசன் கவிதைகளால் ஈர்க்கப்பட்டு கவிதைத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவனானேன்." என்று ஆசிரியர் தன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

'தேடல் பதிப்பக வெளியீடாக வந்திருக்கும் கவிதை நூலின் கவிதைகள் மரபும் புதிதும் இணைந்த வகையில் காணப்படுவதை அவதானிக்கலாம்.

எடுத்துக்காட்டாக

"ஆளில்லா விமானமும்
ஆட்டிலெறி எறிகணையும்
அங்குமிங்கும் உலவிவந்து
உயிர்தனை உறிஞ்சிட
ஒரு கையில் உடைமையும்
மறுகையில் உறவென்றும்
தன்னுயிரை பிடிக்க கரமின்றி
உடல் இளைக்க ஓடி
ஒய்யாரமாய் இருந்தோரும்
ஓலை வீட்டிலிருந்தோரும்
ஒருசேர இணைந்தார்கள்
சாதிமதபேதம் மறந்து...."

மொழிப்பற்றும் மானுடநோக்கும் உள்ள இளங்கவிஞரான சம்பூர் சமரனிடமிருந்து எதிர்காலத்தில் இன்னும் தரமான படைப்புக்களை எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயில்களம்

## இளைஞரணி விழித்தெழுந்தால்

நாளும் பொழுதும்
புலர்ந்தும் மறைந்தும்
நல்லதொரு விடிவிதுவோ? – என
அறியாத மாந்தராய்
கிழிசல்களும் தையல்களும்
சிதைவும் செதுக்கல்களுமாய்
மாண்டுபோன மானுடத்தை
தேடி ஓடும் வேங்கைகளாய்

பாலைநில விதை போலும்
பட்ட மரத்தின் நிழல் போலும்
கலிகாலம் கருவறுத்த காரணத்தால்
கருங்குருவி காகக்கூட்டில்
உரித்திழந்து தவிக்கிறது.

எந்தை நாடே என
எழுச்சி பாட பாரதியில்லை
எழுந்துவா எனக்கூற
வீரத்துறவி இல்லை
என்றெண்ணி கலங்கத் தேவையில்லை
பொருளில்லை திறமில்லை என்ற
போக்கு இனி இல்லை
இளைஞரணி விழித்தெழுந்தால்!

நித்தியா நந்தீஸ்வரன்
வவுனியா பல்கலைக்கழகம்

## மாற்றம்

முற்றும் கோணல் ஆன பின்பு
மும்மரமான கொள்கையுடன்
கோமகன்கள் இனிவரமாட்டார்
மகா ஜனங்கள் முயற்சித்தாலே
மாற்றத்துக்கான வழி பிறக்கும்.

- அரன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் கவிதை இதழ்களின் தொகுப்பு - I

கவிதை வாசகர்களுக்கு புத்தெழுச்சியை உண்டு பண்ணக்கூடியது. அது அவர்களின் உள்ளத்திற்கு பட்டை தீட்டும். அதிர்வை ஏற்படுத்தும். அது கல்லில் உளியினால் செதுக்கிய சிற்பத்தைப் போல என்றும் அழியா வண்ணக் காட்சிகள் தரும். காலத்தின் கண்ணாடியாய் மாற்றங்களுக்கு வலு சேர்க்கும். இந்தவகையில் கவிதைகள் படைப்பிலக்கியத்தில் சமூகப்பயன்பாடு மிக்கதாக பிரதிபலிக்கப்படுகின்றன. மக்களின் யதார்த்த வாழ்வுக்கும் கவிஞர்களின் மனதிலே கொட்டிக் கிடக்கிற ஏராளமான கற்பனைகளுக்குமிடையே ஒரு உண்மையான ஒற்றுமையும் தோற்றப்பாடும் இருக்கின்றது.

இதன் வெளிப்பாட்டுத் தன்மையை எஸ்.ஆர்.தனபாலசிங்கத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "நீங்களும் எழுதலாம்" எனும் 12 இதழ்களின் கவிதைத் தொகுப்பு – I நூலை வாசிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

கவிதை எழுதுவதென்பது கல்வாடியில் கல்லைச் சுட்டு சீமெந்து கலந்து வீட்டைக் கட்டுவது போலல்ல அது. இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் நிலத்தை ஆழமாகத் தோண்டி அதைக் கண்டு பிடித்து அதற்கு பட்டை தீட்டி பெரிய விலைக்கு விற்பனை செய்யும் உயர்தரம் வாய்ந்த இரத்தினக் கற்களைப் போன்றவை. அது கடினமான காரியம்.

கவிதை எழுதுவதாகச் சொல்லி முகப் புத்தகத்தில் வரும் இரண்டொரு கவிதைகளை பிரதிபண்ணிப் போட்டு கவிதைத் தொகுப்பு நூல்களை வெளியிட்டு, விழா நடத்திய பின்பு அக்கவிதைகள் குறித்து ஆளுக்காள் சண்டை பிடித்துக் கொள்ளும் காலகட்டத்தில் எஸ்.ஆர் தனபாலசிங்கம் ஆசிரியராகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களும் எழுதலாம்" எனும் 12 இதழ்களின் கவிதைத் தொகுப்பு நூலை வாசிக்கின்ற போது மிகவும் தரமான காத்திரமான கவிதைகளை வாசிக்கக் கூடியதான ஓர் உணர்வு ஏற்பட்டது.

தொகுப்பின் முதல் இதழிலே நரகம் எனும் தலைப்பில் கவிஞர் வீரா.வீரக்குமார் எழுதிய கவிதை வாசிப்பவரின் மனதிற்குள் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன.

**எமலோகத்தில்**
**எம்மவர் பிரச்சினை!**
**அடிதடியில் ஆத்மாக்கள்**
**எமலோக சபை கூடிற்று**
**முடிவொன்று பண்ணிற்று**
**இலங்கையர்க்கு அங்கும்**
**இடமில்லை.**
**இடைவெளியில்**
**இலங்கை ஆத்மாக்கள்**

என்ற வரிகள் இலங்கையிலுள்ள மானிடர்களின் மனதில் உள்ள உண்மை ஆத்மாவின் நிலையை வெளிப்படுத்தி இருக்கிறது. மிக அருமையான கற்பனை. ஆனால், தினம் தினம் உள்ளத்திலுள்ள நற்பண்புகளை இல்லாமல் செய்து விட்டு அடுத்தவனுடைய குடியைக் கெடுப்பதற்கும் அழிப்பதற்கும் சூழ்ச்சி செய்கிறவர்களை கவிஞர் எப்படி இடைவெளியில் விட்டு வைத்தார் என்று புரியவில்லை.

கவிதை தீய கெட்ட குணமுடையவர்களையும், கொடுங்கோல் ஆட்சியாளர்களையும் இனவாத மிருக சிந்தனையுடையவர்களையும் அடுத்தவனுடைய இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து வாழ்கிறவர்களையும் இரக்க குணமில்லாமல் மனிதாபிமானமற்ற நிலையில் வாழும் சூழலையும் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு எமலோகத்திலும் இடமில்லை. அதுதான் உண்மை. ஆனால். கவிஞர் அவர்களை இடைவெளியில் விட்டதுதான் தப்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வாழும் சூழலின் அவலநிலையை சொல்லுகின்றவனின் படைப்புத்தான் பெரும்பாலும் உயிர் வாழும் என்று சொல்லுவார்கள். அதற்கு நூலாசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கமும் பலியாகி இருக்கிறார்.

**பெருமைப்படவும் பொறாமைப்படவும்**
**யாதுளவாயினும் - ஒரு சிலர்**
**பெயர் பொறிப்பதற்காய்**
**பாமர மக்களை**
**பலிகடாக்களாக்கும்**
**பரிதாபங்களும் மனதை**
**பரிதவிக்க வைக்கின்றன.**

என்று கவிஞர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் எழுதிய கவிதை சமூகச் சூழலில் இயல்பாகவே காணப்படும் விடயமாக இருக்கிறது. இது தாழ்வு மனப்பான்மையின் காரணமாக நிகழும் ஒரு முக்கியமான விடயம். பிறிதொரு முக்கியமான விடயம் பெருமை. இவை இரண்டும் மனிதனை அழித்து விடும் வல்லமை வாய்ந்தவை. இவை மனித வாழ்வின் அத்தனை அம்சங்களிலும் மிக நுண்மையாக ஊடாடி நிற்கிறது. அதிகாரப் பலமிக்கவர்கள் தனக்கு கீழுள்ளவர்களை அடக்கி ஒடுக்கி மீளவும் மீட்டெடுத்து வரமுடியாமலேயே சிலர் சூழ்ச்சி செய்வார்கள். காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பாரிய தீய விளைவுகள் ஏற்படும். பாமரர் என்ன? படித்தவர்கள் மட்டத்திலேயே இந்தப் புலமைக்காய்ச்சல் இருக்கிறது. ஒவ்வொருவரும் தங்களின் மனச்சாட்சியின்படி தம் கையை தம் நெஞ்சில் வைத்து தொட்டுப் பார்த்தாலே தெரியும் யார் யாருக்கு அடுத்தவனுக்கு என்ன தீங்கினை விளைத்திருக்கின்றோம் என்று. இக்கவிதை கண்ணுக்கு கண்ணாடியைப் போட்டுப் பார்க்காமல் எடுத்த எடுப்பிலே இயல்பாக விளங்கிக் கொள்ளச் செய்யும் சொல்லில் எழுதியுள்ளார் கவிஞர். கவிதை இதமாக இருக்கிறது.

**மிகுதி அடுத்த இதழில்...**

**இக்பால் அலி**

**நன்றி : தீம்புனல் (மின்னிதழ்)**

**17.12.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமென்று பாடு

இக்கரை விட்டோ
அக் - கரை?
அக்கரை கொள்ளுமா
அக்கறை.

முகவரி தொலைத்து
முகவரி தேடும்
முயல்வுகள் தொடரும்
தேடிய முகவரி
ஏனோ பின்னர்
தொலையவும் செய்யும்
நிஜங்கள் தொலையின்
நிலைக்குமா நிழல்கள்.

எட்டுத் திக்கும் சென்றே
இங்கு சேர்ந்திட்டால்
எட்டிடும் பொருளோடு
அரிய கலைச் செல்வங்கள்
ஒட்டிக் கொண்டால் அங்கெனில்
ஓங்கிடுமா இந்நாடு.

தாய்நாடென்று ஒன்று
தரணியில் நமக்குண்டென்று
சேய் போலும் உணர்வோடு
சேர்ந்திங்கு உறவோடு
வாழும் மனித குலம் நாமென்று
எங்கிருந்தாலும் பாடு.

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

கடிதம் மூலம் தனி இதழைப் பெற விரும்புவோர் 160/= ரூபா பெறுமதியான முத்திரைகளை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தரின் படுகொலை

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான்
சுடப்பட்டிறந்தார்
சிவில் உடை அணிந்த
அரச காவலர்
அவரைக் கொன்றனர்
யாழ் நூலகத்தின்
படிக்கட்டருகே அவரது
சடலம் குருதியில் கிடந்தது
இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்து
எங்கள் பட்டியலில்
இவர் பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?
என்று சினந்தனர்

இல்லை ஐயா
தவறுகள் எதுவும்
நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று ஆகினால்....
என்றனர் அவர்கள்
சரி சரி
உடனே மறையுங்கள்
பிணத்தை என்று கூறி
அமைச்சர்கள் மறைந்தனர்
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச்
சென்றனர்
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை
மூடிமறைத்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகலோகவாத சூத்திரத்தினைக்
கொளுத்தி எரித்தனர்
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்மபதமும்தான்
சாம்பரானது.

எம்.ஏ.நு.்.மான்

1981 – யூன் முதலாம் திகதி யாழ் நூலகம் எரிக்கப்பட்டதையிட்டு பேராசிரியர் எம்.ஏ.நு.்.மானால் எழுதப்பட்டது.

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ? - புலனில்
வாழ்க்கை இனியுண்டோ? - நம்மிலந்த
வாழ்க்கை இனியுண்டோ?

இனியொரு விதிசெய்வோம் - அதை
எந்நாளும் காப்போம்;
தனியொருவனுக்குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம் - வாழ்க!

-பாரதி -

('பாரத சமுதாயம்' கவிதையிலிருந்து]

கவிதை சம்பந்தமான கட்டுரைகள், விமர்சனங்கள், மொழிபெயர்ப்புக் கவிதைகள், படைப்பாளிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் பெயர்ப்பும்

## What did you learn in school today?

**Pete Seeger**

What did you learn in school today,
Dear little boy of mine?
What did you learn in school today,
Dear little boy of mine?

I learned that Washington never told a lie.
I learned that soldiers seldom die.
I learned that everybody's free,
And that's what the teacher said to me.
Chorus
That's what I learned in school today,
That's what I learned in school

What did you learn in school today,
Dear little boy of mine?
What did you learn in school today?

Dear little boy of mine?
I learned that policemen are my friends.
I learned that justice never ends.
I learned that murderers die for their crimes
Even if we make a mistake sometimes.
Chorus

What did you learn school today,
Dear little boy of mine?
What did you learn in school today,
Dear little boy of mine?
I learned our Government must be strong;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It's always right and never wrong;
Our leaders are the fines men
And we elect them again and again.
Chorus

What did you learn in school today,
Dear little boy of mine?
What did you learn in school today,
Dear little boy of mine?
I learned about the great ones we have had;
We fought in Germany and in France
And someday I might get my chance.

## பள்ளியில் இன்று நீ கற்றதும் என்ன?

*பீற் ஸீகர்*

பள்ளியில் இன்று நீ கற்றதும் என்ன
என்னாசைப் பயலே?
பள்ளியில் இன்று நீ கற்றதும் என்ன
என்னாசைப் பயலே?

வோஷிங்டன் பொய் சொன்னதிலை
என
படைவீரர்கள் சாவது அரிதென
அனைவரும் சுதந்திர மனிதர்கள் என
எனக்கு வாத்தியார் சொல்லித்தந்தார்
(கோரஸ்)
பள்ளியில்.....

பள்ளியில் இன்று நீ கற்றதும் என்ன
என்னாசைப் பயலே?
பள்ளியில் இன்று நீ கற்றதும் என்ன
என்னாசைப் பயலே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிசுக்காரர் என் நண்பர்கள்
எனவும்
நீதிக்கென்றும் முடிவிலை எனவும்
குற்றங்கட்காய்ச் கொலைஞர் சாகுவர்
பிழைசெயின் நாமுஞ் சாகுவம்
எனவும்
(கோரஸ்)
பள்ளியில்.....

பள்ளியில் இன்று நீ கற்றதும் என்ன
என்னாசைப் பயலே?
பள்ளியில் இன்று நீ கற்றதும் என்ன
என்னாசைப் பயலே?
அரசு வலிதாய் இருக்க வேண்டுமென
என்றும் அது சரி, பிழை
செய்யாதென
எங்கள் தலைவர்கள் மாந்தருள்
அரியோர்
மீளமீள நாம் தெரிவோர் அவரென
(கோரஸ்)
பள்ளியில்.....

பள்ளியில் இன்று நீ கற்றதும் என்ன
என்னாசைப் பயலே?
பள்ளியில் இன்று நீ கற்றதும் என்ன
என்னாசைப் பயலே?
போர்கள் அத்துணை கொடிதல
நமக்கு
வாய்த்த புகழ்மிகு போர்கள் பற்றியும்
ஜேர்மனி பிரான்சில் நாம்
போரிட்டதும்
ஒருநாள் எனக்கும்
வாய்ப்புண்டெனவும்.

சி.சிவசேகரம்

***ISSN 1800-3311***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org